புதுமுறைப்

# பெரிய

# அரிச்சுவடி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1948
MADRAS

621
7-49



V. S. வெங்கடராமன் கம்பெனி

: : கும்பகோணம்

[விலை 2 அணா

TB
031C17
N49
148735

## எ ண் க ள் :

# 1 2 3 4 5 6 7 8 9 10

| | | |
|---|---|---|
| ஒன்று | 1 | ௧ |
| இரண்டு | 2 | ௨ |
| மூன்று | 3 | ௩ |
| நான்கு | 4 | ௪ |
| ஐந்து | 5 | ௫ |
| ஆறு | 6 | ௬ |
| ஏழு | 7 | ௭ |
| எட்டு | 8 | ௮ |
| ஒன்பது | 9 | ௯ |
| பத்து | 10 | ௰ |
| பதினொன்று | 11 | ௰௧ |
| பன்னிரண்டு | 12 | ௰௨ |
| பதின்மூன்று | 13 | ௰௩ |
| பதினான்கு | 14 | ௰௪ |
| பதினைந்து | 15 | ௰௫ |
| பதினாறு | 16 | ௰௬ |
| பதினேழு | 17 | ௰௭ |
| பதினெட்டு | 18 | ௰௮ |
| பத்தொன்பது | 19 | ௰௯ |
| இருபது | 20 | ௨௰ |
| முப்பது | 30 | ௩௰ |
| நாற்பது | 40 | ௪௰ |
| ஐம்பது | 50 | ௫௰ |
| அறுபது | 60 | ௬௰ |

| | | |
|---|---|---|
| எழுபது | 70 | ௭௰ |
| எண்பது | 80 | ௮௰ |
| தொண்ணூறு | 90 | ௯௰ |
| நூறு | 100 | ௱ |
| இருநூறு | 200 | ௨௱ |
| முன்னூறு | 300 | ௩௱ |
| நானூறு | 400 | ௪௱ |
| ஐந்நூறு | 500 | ௫௱ |
| அறுநூறு | 600 | ௬௱ |
| எழுநூறு | 700 | ௭௱ |
| எண்ணூறு | 800 | ௮௱ |
| தொளாயிரம் | 900 | ௯௱ |
| ஆயிரம் | 1,000 | ௲ |
| பதினாயிரம் | 10,000 | ௰௲ |
| நூறு ஆயிரம் = லட்சம் | 100,000 | ௱௲ |
| பத்து நூறு ஆயிரம் = பத்து லட்சம் | 10,00,000 | ௰௱௲ |
| நூறு நூறு ஆயிரம் = கோடி | 1,00,00,000 | ௱௱௲ |

## கடிகார எண்கள் :

I II III IV V VI VII VIII IX X XI X

27 JUN 1948
MADRAS

உ

அரி ஓம் நன்றாக

குரு வாழ்க! குருவே துணை

---

கணபதி காப்பு. வேலும் மயிலும் துணை.

# ஓம் நமோ நாராயணாய சித்தம்

---

# ஹரி நமோத்து சிந்தம்

---

உயிரெழுத்துக்கள் : 12

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

---

மெய்யெழுத்துக்கள் : 18

க் ங் ச் ஞ் ட் ண் த்

ந் ப் ம் ய் ர் ல் வ்

ழ் ள் ற் ன்

---

ஆய்த எழுத்து : 1

ஃ

உயிர்மெய் எழுத்துக்கள் :

# க ங ச ஞ ட ண த ந
# ப ம ய ர ல வ
# ழ ள ற ன

---

வடமொழி எழுத்துக்கள் :

# ஜ ஸ ஷ ஹ க்ஷ

---

குறில் :

# அ இ உ எ ஒ

நெடில் :

# ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ

வல்லினம் :

# க ச ட த ப ற

மெல்லினம் :

# ங ஞ ண ந ம ன

இடையினம் :

# ய ர ல வ ழ ள

| | | | |
|---|---|---|---|
| குறில் | அ | க | ங |
| நெடில் | ஆ | கா | ஙா |
| குறில் | இ | கி | ஙி |
| நெடில் | ஈ | கீ | ஙீ |
| குறில் | உ | கு | ஙு |
| நெடில் | ஊ | கூ | ஙூ |
| குறில் | எ | கெ | ஙெ |
| நெடில் | ஏ | கே | ஙே |
| நெடில் | ஐ | கை | ஙை |
| குறில் | ஒ | கொ | ஙொ |
| நெடில் | ஓ | கோ | ஙோ |
| நெடில் | ஔ | கௌ | ஙௌ |
| மெய் | — | க் | ங் |

| | | | |
|---|---|---|---|
| ச | ஞ | ட | ண |
| சா | ஞா | டா | ணா |
| சி | ஞி | டி | ணி |
| சீ | ஞீ | டீ | ணீ |
| சு | ஞு | டு | ணு |
| சூ | ஞூ | டூ | ணூ |
| செ | ஞெ | டெ | ணெ |
| சே | ஞே | டே | ணே |
| சை | ஞை | டை | ணை |
| சொ | ஞொ | டொ | ணொ |
| சோ | ஞோ | டோ | ணோ |
| சௌ | ஞௌ | டௌ | ணௌ |
| ச் | ஞ் | ட் | ண் |

| | | | |
|---|---|---|---|
| த | ந | ப | ம |
| தா | நா | பா | மா |
| தி | நி | பி | மி |
| தீ | நீ | பீ | மீ |
| து | நு | பு | மு |
| தூ | நூ | பூ | மூ |
| தெ | நெ | பெ | மெ |
| தே | நே | பே | மே |
| தை | நை | பை | மை |
| தொ | நொ | பொ | மொ |
| தோ | நோ | போ | மோ |
| தௌ | நௌ | பௌ | மௌ |
| த் | ந் | ப் | ம் |

# உயிர்மெய் யெழுத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| ய | ர | ல | வ |
| யா | ரா | லா | வா |
| யி | ரி | லி | வி |
| யீ | ரீ | லீ | வீ |
| யு | ரு | லு | வு |
| யூ | ரூ | லூ | வூ |
| யெ | ரெ | லெ | வெ |
| யே | ரே | லே | வே |
| யை | ரை | லை | வை |
| யொ | ரொ | லொ | வொ |
| யோ | ரோ | லோ | வோ |
| யௌ | ரௌ | லௌ | வௌ |
| ய் | ர் | ல் | வ் |

| | | | |
|---|---|---|---|
| ழ | ள | ற | ன |
| ழா | ளா | றா | னா |
| ழி | ளி | றி | னி |
| ழீ | ளீ | றீ | னீ |
| ழு | ளு | று | னு |
| ழூ | ளூ | றூ | னூ |
| ழெ | ளெ | றெ | னெ |
| ழே | ளே | றே | னே |
| ழை | ளை | றை | னை |
| ழொ | ளொ | றொ | னொ |
| ழோ | ளோ | றோ | னோ |
| ழௌ | ளௌ | றௌ | னௌ |
| ழ் | ள் | ற் | ன் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஸ | ஷ | க்ஷ | ஹ |
| ஜா | ஸா | ஷா | க்ஷா | ஹா |
| ஜி | ஸி | ஷி | க்ஷி | ஹி |
| ஜீ | ஸீ | ஷீ | க்ஷீ | ஹீ |
| ஜு | ஸு | ஷு | க்ஷு | ஹு |
| ஜூ | ஸூ | ஷூ | க்ஷூ | ஹூ |
| ஜெ | ஸெ | ஷெ | க்ஷெ | ஹெ |
| ஜே | ஸே | ஷே | க்ஷே | ஹே |
| ஜை | ஸை | ஷை | க்ஷை | ஹை |
| ஜொ | ஸொ | ஷொ | க்ஷொ | ஹொ |
| ஜோ | ஸோ | ஷோ | க்ஷோ | ஹோ |
| ஜௌ | ஸௌ | ஷௌ | க்ஷௌ | ஹௌ |
| ஜ் | ஸ் | ஷ் | க்ஷ் | ஹ் |

ஹூ் ஸ்ரீ உ ஷை

மகா-ள-ள-ஸ்ரீ நூ ஆூ

## ஓர்-எழுத்துச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | கை | வை | வா | நீ | தா |
| ஈ | பை | தை | போ | தீ | மை |

## இரண்டு-எழுத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அடி | ஊமை | காது | செடி |
| அரை | எலி | கிளி | சேனை |
| அணு | எடு | கீரை | சொல் |
| ஆடு | எண் | குடை | சோறு |
| ஆறு | ஏணி | கூடை | ஞானி |
| ஆடை | ஏர் | கெடு | தடி |
| இடி | ஏழு | கேணி | தலை |
| இலை | ஐயா | கைதி | தாழை |
| இசை | ஐயோ | கொடு | திசை |
| ஈடு | ஒலி | கோடு | தீனி |
| ஈர் | ஒளி | கௌளி | துணி |
| ஈறு | ஒழி | சடை | தூண் |
| உண் | ஓலை | சாலை | தெரு |
| உலை | ஓடு | சிலை | தேர் |
| உடை | ஓசை | சீலை | தை |
| ஊது | ஔவை | சுமை | தொடு |
| ஊசி | கண் | சூடு | தோடு |

148735

## இரண்டெழுத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நரி | பிடி | முடி | ருசி |
| நாய் | பீடை | மூடி | லாடு |
| நில் | புலி | மெது | லீலை |
| நீர் | பூனை | மேசை | வலை |
| நுனி | பெண் | மைனா | வாழை |
| நூல் | பைசா | மொழி | விலை |
| நெய் | பொன் | மோர் | வீடு |
| நேர் | போடு | யானை | வெடி |
| நொய் | மணி | ரவை | வேலி |
| நோய் | மாடு | ராணி | வேளை |
| பல் | மிதி | ரிஷி | வைகை |
| பால் | மீன் | ரீதி | வைரி |

## மூன்று-எழுத்துச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அரண் | எருமை | ஓடம் | கேட்டை |
| ஆவணி | ஏவல் | கடல் | கொக்கு |
| இவன் | ஐயம் | காலம் | கொட்டை |
| ஈயம் | ஒன்று | கிணறு | கோட்டை |
| உலகு | ஒத்து | கீதம் | கோணம் |
| உண்மை | ஒப்பு | குடம் | கௌதாரி |
| ஊதல் | ஓணான் | கூடம் | சங்கு |
| எஃகு | ஓமம் | கெடுதி | சாந்து |

| | | | |
|---|---|---|---|
| சிந்து | தையல் | பேரன் | யோசனை |
| சீலம் | தொடர் | பையன் | ரசம் |
| சுகம் | தொண்டு | பொம்மை | ரதம் |
| சூலம் | தோண்டி | போத்து | ராகம் |
| செக்கு | தோப்பு | மதம் | ரூபாய் |
| சேவல் | நகம் | மாதம் | ரேவதி |
| சைலம் | நாகம் | மிகுதி | ரோமம் |
| சொத்து | நிலம் | மீனம் | லக்ஷ்மி |
| சோளம் | நீலம் | முகம் | லாபம் |
| ஞானம் | நெட்டி | மூடன் | லோபம் |
| டப்பி | நேசம் | மெத்தை | வண்டி |
| தம்பி | நொண்டி | மேகம் | வாரம் |
| தயிர் | நோன்பு | மையம் | விருடி |
| தாளம் | பதம் | மொட்டை | வீரம் |
| தீபம் | பாதம் | மோகம் | வெட்டு |
| துண்டு | பிடரி | மௌனம் | வேங்கை |
| தூபம் | பீடம் | யமன் | வைகாசி |
| தெற்கு | புதர் | யாவன் | வௌவால் |
| தென்னை | பூண்டு | யுகம் | .... |
| தேக்கு | பெட்டி | யூகம் | .... |

## நான்கு-எழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அப்பம் | ஐயனார் | நரம்பு |
| ஆப்பம் | ஒட்டன் | பட்டம் |
| இன்பம் | ஓட்டம் | மகுடம் |
| ஈர்க்கு | ஔடதம் | யாசகம் |
| உலகம் | கப்பல் | ரத்தம் |
| ஊஞ்சல் | சட்டம் | லக்கம் |
| எண்ணம் | டமாரம் | வண்ணான் |
| ஏற்றம் | தங்கம் | வைக்கோல் |

எஃகு அஃது அஃகுள் அஃறிணை

### அப்பியாசம்

| | | | |
|---|---|---|---|
| க்க | பக்கம் | சக்கரம் | அக்காள் |
| ச்ச | தச்சன் | மச்சம் | ஈச்சமரம் |
| ட்ட | பட்டம் | தட்டான் | வட்டம் |
| ண்ண | அண்ணன் | கண்ணன் | வண்ணம் |
| த்த | சத்தம் | நத்தம் | அத்தான் |
| ப்ப | கப்பல் | பாப்பா | ஆப்பம் |
| ம்ம | அம்மா | கம்மல் | தும்மல் |
| ய்ய | அய்யர் | பய்யன் | மய்யம் |
| ல்ல | வெல்லம் | நல்லவர் | பல்லக்கு |
| வ்வ | தவ்வல் | கவ்வல் | பவ்வம் |
| ள்ள | பள்ளம் | கள்ளர் | வெள்ளம் |
| ற்ற | முற்றம் | ஏற்றம் | வற்றல் |
| ன்ன | மன்னன் | சன்னல் | கன்னம் |
| ங்க | சங்கம் | தங்கம் | கங்கணம் |
| ஞ்ச | மஞ்சள் | ஊஞ்சல் | பஞ்சம் |
| ண்ட | வண்டல் | சுண்டல் | கண்டம் |
| ந்த | பந்தல் | சந்தனம் | காந்தம் |
| ம்ப | பம்பரம் | கம்பளம் | சாம்பல் |
| ன்ற | மன்றம் | தென்றல் | சென்ற |

| | | | |
|---|---|---|---|
| ஜலம் | ஸித்தி | வருஷம் | லக்ஷ்மி |
| ஜானகி | ஸீதை | கஷாயம் | ஸ்ரீதேவி |
| ஜில்லா | ஸுந்தரம் | மூஷிகம் | ஸ்ரீநிவாசன் |
| ஜீவனம் | ஸூரியன் | ஷீட்டு | ஸ்ரீரங்கம் |
| ஜுரம் | ஹநுமான் | விஷு | ஸ்ரீமான் |
| ஜூலை | ஹாரம் | பாஷை | ட்ச = க்ஷ |
| ஜெயம் | ஹிமயமலை | புஷ்பம் | பக்ஷம் |
| ஜைனர் | பலஹீனம் | க்ஷணம் | = பட்சம் |
| ஜோடி | முகூர்த்தம் | சாக்ஷி | கக்ஷி |
| வஜ்ரம் | ஹேது | க்ஷீரம் | = கட்சி |
| ஸரஸ்வதி | ஹைதர் | க்ஷேமம் | மீனாக்ஷி |
| ஸாமான் | ஹோமம் | பரீக்ஷை | = மீனாட்சி |

ரோஜா புஷ்பம்
ஸரோஜினி தேவி
சூர ஸம்ஹாரம்
க்ருஷ்ண பக்ஷம்
ஜீவ ஜந்து
அக்ஷய வருஷம்
சுக்குக் கஷாயம்
ஜார்ஜ் மஹாராஜா
மஹாத்மா காந்தி

ஜோடி மாடு
ஸோம வாரம்
தஞ்சை ஜில்லா
ஸ்நானம் செய்
ஹம்ஸ பக்ஷி
ஜால வித்தை
பாட புஸ்தகம்
ஷண்முக நாதன்
சூரிய கிரஹணம்

# பலரது பழக்கத்திலுள்ள சொற்கள்

| உறுப்புக்கள் | மிருகங்கள் | மரங்கள் | தானியங்கள் |
|---|---|---|---|
| தலை | ஆடு | தென்னமரம் | நெல் |
| முகம் | பசு | பனைமரம் | சோளம் |
| கண் | எருது | மாமரம் | கம்பு |
| காது | எருமை | ஆலமரம் | கேழ்வரகு |
| மூக்கு | பூனை | பலாமரம் | உளுந்து |
| வாய் | நாய் | பாக்குமரம் | பயறு |
| பல் | குதிரை | புளியமரம் | எள் |
| நாக்கு | கழுதை | அரசமரம் | கடலை |
| கழுத்து | பன்றி | விளாமரம் | மொச்சை |
| தோள் | யானை | கருவேலமரம் | கடுகு |
| கை | புலி | வேப்பமரம் | மிளகு |
| வயிறு | கரடி | நாவல்மரம் | சீரகம் |
| கால் | சிங்கம் | முருங்கை | வெந்தயம் |
| விரல் | மான் | பூவரசமரம் | மல்லி |
| மார்பு | ஒட்டகம் | ஈச்சமரம் | பட்டாணி |
| முதுகு | ஓநாய் | தேக்குமரம் | கொள்ளு |

| காய்கறிகள் | புஷ்பங்கள் | பட்சிகள் |
|---|---|---|
| வாழைக்காய் | ரோஜா | காகம் |
| கத்தரிக்காய் | மல்லிகை | கோழி |
| புடலங்காய் | முல்லை | மயில் |
| அவரைக்காய் | செண்பகம் | கிளி |
| பாகற்காய் | சம்பங்கி | புறா |
| வெள்ளரிக்காய் | மந்தாரை | குருவி |
| மிளகாய் | அரளி | பருந்து |
| மாங்காய் | செவ்வந்தி | கருடன் |
| பூசனிக்காய் | தாமரை | வாத்து |
| வெண்டைக்காய் | அல்லி | மைனா |
| தேங்காய் | கனகாம்பரம் | குயில் |
| சேப்பங்கிழங்கு | பாரிஜாதம் | கொக்கு |
| கருணைக்கிழங்கு | மனோரஞ்சிதம் | கழுகு |

| ஒருமை | பன்மை |
|---|---|
| செடி | செடிகள் |
| கண் | கண்கள் |
| பூ | பூக்கள் |
| பழம் | பழங்கள் |
| பல் | பற்கள் |
| நாள் | நாட்கள் |
| நான் | நாம்<br>நாங்கள் |
| நீ | நீங்கள் |
| அது | அவை<br>அவைகள் |
| அவன்<br>அவள் | அவர்கள் |

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| அப்பா | அம்மா |
| மகன் | மகள் |
| மாமா | மாமி |
| தம்பி | தங்கை |
| கிழவன் | கிழவி |
| செல்வன் | செல்வி |
| குறவன் | குறத்தி |
| வண்ணான் | வண்ணாத்தி |
| வேலைக்காரன் | வேலைக்காரி |
| அரசன் | அரசி |
| எருது | பசு |
| சேவல் | பெட்டை |
| ஒருவன் | ஒருத்தி |
| மாணவன் | மாணவி |

**சந்தி**

மா + மரம் = மாமரம்
மா + இலை = மாவிலை
மா + காய் = மாங்காய்
மா + பழம் = மாம்பழம்
மா + செடி = மாஞ்செடி
பலா + காய் = பலாக்காய்
மண் + குடம் = மட்குடம்
பொன் + கலம் = பொற்கலம்
புகை + இலை = புகையிலை
ஆல் + இலை = ஆலிலை
சிறு + அன்னை = சிற்றன்னை

**அடுக்குத் தொடர்**

மந்தை மந்தையாய்
சாரை சாரையாய்
சீப்புச் சீப்பாய்
தார் தாராய்
கொத்துக் கொத்தாய்
குலை குலையாய்
கூட்டங் கூட்டமாய்
வரிசை வரிசையாய்
அடுக்கடுகாய்
குவியல் குவியலாய்
படிப்படியாய்

பசுங் கன்று
குதிரைக் குட்டி
கோழிக் குஞ்சு
அணிற் பிள்ளை
சிங்கக் குட்டி
கிளிப் பிள்ளை
எலிக் குஞ்சு
கீரிப் பிள்ளை
தென்னம் பிள்ளை
வாழைக் கன்று
தகர டப்பி
ஈய ஊதல்
மூடு பனி
கோதுமை ரொட்டி
பொன் கொலுசு
தென்னந்தோப்பு
மழைக் காலம்
வருஷப் பிறப்பு
சூர ஸம்ஹாரம்
கூரை வீடு
பஞ்சு மெத்தை
கல் உரல்
அகல் விளக்கு
சைக்கிள் வண்டி
ஊசி நூல்
மண் சுவர்
தங்கக் காப்பு
குடை நிழல்
நெருப்புப் பெட்டி
பொங்கல்பண்டிகை
மாலை நேரம்
ஆடு மாடு
வாழை இலை
மைல் கல்
சங்க நாதம்
பஞ்ச வர்ணம்
பால் பாயசம்
கடல் நீர்
கீழ வீதி
சுடு சோறு
நெட்டை மனிதன்
கிளிக் கூடு
காத தூரம்
வீட்டு வரி
மாசி மகம்
கார் ஈயம்
ஸ்வாமி தரிசனம்
சுவர் உயரம்
சுக்குக் கஷாயம்
நெல் வயல்
சந்தனப் பேலா
மலை மேடு
குள்ள நரி
தலை வலி
வைர நகை
ஓம சுரசம்

| | | | |
|---|---|---|---|
| நீ வா.<br>கை வை. | பூ தா.<br>நீ போ. | மா அரை.<br>மை இடு. | பை தை.<br>ஈ பார். |

பூனை சீறும்.
நாய் குரைக்கும்.
பசு கதறும்.
ஆடு கத்தும்.
காகம் கரையும்.
குதிரை கனைக்கும்.
பன்றி உறுமும்.
நரி ஊளையிடும்.
எலி கீச்சிடும்.
கோழி கூவும்.
கிளி கொஞ்சும்.
யானை பிளிறும்.
சிங்கம் கர்ஜிக்கும்.
மயில் அகவும்.
ஆந்தை அலறும்.
பாம்பு சீறும்.
கண்களால் பார்க்கிறோம்.
காதினால் கேட்கிறோம்.
மூக்கினால் முகருகிறோம்
வாயினால் பேசுகிறோம்.
கைகளால் வேலைசெய்கிறோம்.
கால்களால் நடக்கிறோம்.
சர்க்கரை தித்திக்கும்.
புளியங்காய் புளிக்கும்.
வேப்பிலை கசக்கும்.

உப்பு கரிக்கும்.
மிளகு உறைக்கும்.
பாக்கு துவர்க்கும்.
தம்பி! வா.
புத்தகம் எடு.
பாடம் படி.
பலகை எடு.
கணக்குப் போடு.
படம் எழுது.
பாட்டுப் பாடு.
மணி அடி.
பால் கற.
அண்ணா! வா.
நீ சாப்பிடு.
காற்று வீசுகிறது.
நீறு பூசு.
தீபம் ஏற்று.
கதவைப் பூட்டு.
பம்பரம் சுற்று.
எழுந்து நில்.
ஊஞ்சல் ஆடலாம்.
ஓடி வா.
மாமா சௌக்கியமா?
நீர்மோர் குடி.
கடவுளை வணங்கு.

நான் பம்பரம் சுற்றுகிறேன்.
நீ பட்டம் விடுகிறாய்.
கோபாலன் கோலி ஆடுகிறான்.
கமலம் கயிறு தாண்டுகிறாள்.
இவர்கள் பந்து அடிக்கிறார்கள்.
கண் தெரியாதவன் குருடன்.
காது கேளாதவன் செவிடன்.
கால் இல்லாதவன் நொண்டி.
கை இல்லாதவன் முடவன்.
வீடு கட்டுபவன் கொத்தன்.
நகை செய்பவன் தட்டான்.
பயிர் செய்பவன் குடியானவன்.
துணி நெய்பவன் சேணியன்.
பானை செய்பவன் குயவன்.
இரும்புவேலை செய்பவன் கருமான்.
மரவேலை செய்பவன் தச்சன்.
ஆடு மேய்ப்பவன் இடையன்.
துணி தைப்பவன் தையற்காரன்.
துணி வெளுப்பவன் வண்ணான்.
பாட்டுக் கச்சேரி கேட்டிருக்கிறாயா ?
மணி அய்யர் வாயால் பாடுகிறார்.
சௌடய்யா பிடில் வாசிக்கிறார்.
சிவவடிவேலு மிருதங்கம் அடிக்கிறார்.
ஸரஸ்வதி வீணை வாசிக்கிறாள்.
கண்ணன் புல்லாங்குழல் ஊதுகிறார்.
ராஜரத்தினம் நாகசுரம் வாசிக்கிறார்.
சுலோசனா நாட்டியம் ஆடுகிறாள்.
சிலர் ஸினிமா பார்க்கிறார்கள்.
பலர் ரேடியோ கேட்கிறார்கள்.

பயிர்த்தொழிலே உயிர்த் தொழில்.
அகல உழுவதை ஆழ உழு.
ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்.
களை எடுத்தவன் விளைவு எடுப்பான்.
ஆட்டுக்குட்டி வீட்டில் வளரும்.
கன்றுக்குட்டி துள்ளிக் குதிக்கும்.
ஆண்டி ஒருவன் தோண்டி வாங்கினான்.
நொண்டி ஒருவன் வண்டி ஏறினான்.
தோசை சுட்டால் ஓசை கேட்கும்.
மயில் இறகு வெகு அழகு.
வண்டு தேன் உண்டு திரியும்.
கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்.
கள்ளன் பின்னே குள்ளன் போனான்.
சித்திரையும் வைகாசியும் இளவேனிற்காலம்
ஆனியும் ஆடியும் முதுவேனிற் காலம்.
ஆவணியும் புரட்டாசியும் கார் காலம்.
ஐப்பசியும் கார்த்திகையும் குளிர்காலம்.
மார்கழியும் தையும் முன்பனிக் காலம்
மாசியும் பங்குனியும் பின்பனிக் காலம்.
மிளகாய்ப் பழம் சிவப்பு நிறம்.
எலுமிச்சம்பழம் மஞ்சள் நிறம்.
மல்லிகைப்பூ வெள்ளை நிறம்.
புல்லும் இலையும் பச்சை நிறம்.
வானமும் கடலும் நீல நிறம்.
காகமும் குயிலும் கறுப்பு நிறம்.
நாம் பிறந்தது தமிழ் நாடு.
தமிழ் நமது தாய்மொழி.
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

148735 TB 031(1) N49

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதில் ஒரு ஈ விழுந்து தவித்தது. ஐயா பார்த்தாள். உடனே அந்த ஈயைக் குச்சியால் எடுத்து வெளியில் விட்டாள். ஈ சந்தோஷமாகப் பறந்துபோயிற்று.

---

ஒரு தனவந்தர் வீட்டிற்கு ஒரு விகடகவி வந்தார். தனவந்தர் வேலைக்காரனைப் பார்த்து, "அவருக்கு எண்ணெய் தேய்த்துவிடு" என்றார். வேலைக்காரன் எண்ணெய்க் கிண்ணம் எடுத்து வந்தான். அவனைப் பார்த்து விகடகவி, "எண்ணெய் தேய்த்துக்கொள்ள இரு கை போதாது; பல கை வேண்டும்" என்றார். வேலைக்காரன் அவர் சொன்னதின் கருத்தை அறிந்துகொண்டான். உடனே அவர் உட்கார்ந்து தேய்த்துக்கொள்ள ஒரு பலகையும் கொண்டுவந்தான். இது நல்ல விகடமல்லவா!

---

## கடவுள்

முருகன்:—சுந்தரி! கடவுள் இருக்குமிடத்தைச் சொல். சொன்னால் ஒரு ரூபாய் இனாம் தருகிறேன்.

சுந்தரி:—ஆஹா! உனக்கு இரண்டு ரூபாய் இனாம் தருகிறேன்; கடவுள் இல்லாத இடத்தைச் சொல்.

முருகன் வெட்கம் அடைந்தான். கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை. உலகத்தைப் படைத்தவர் அவரே. நம்மை உண்டாக்கியவரும் அவரே. நாம் தினமும் கடவுளைத் தொழவேண்டும்.

10, ஸ்ரீ வேத விநாயகர் தெரு,
கும்பகோணம்,
1—6—1949.

அன்பார்ந்த சுந்தரம்,

இங்கு யாவரும் சுகம். அவ்விடத்திய க்ஷேமத்தைப் பற்றி எழுத வேண்டுகிறேன்.

இந்த மாதம் கட்டி முடிந்த எங்கள் புதிய வீட்டுக்கு, வருகிற ஞாயிற்றுக்கிழமை குடிப்போகிறோம். அது சம்பந்தமாக அன்று பகல் 11 மணிக்கு நடைபெறும் விருந்திற்கு நீ வந்துசேரவும். வரும்பொழுது உன் தங்கை ஸரஸ்வதியை அழைத்து வா.

உன் அன்பார்ந்த நண்பன்,

வெ. ராஜகோபாலன்

விலாசம்:
ஸ்ரீ சுந்தரம்,
16, மேல வீதி,
திருவாரூர்.

## பிள்ளையார் சிந்தனை

சிந்தித்தவர்க்கருள் செய்வாய் கணபதி ஜய ஜய!!
சீரிய ஆனைக் கன்றே ஜய! ஜய!!
அன்புடை அமரரைக் காப்பாய் ஜய! ஜய!!
ஆவித் துணையே கணபதி ஜய! ஜய!!
இண்டைச் சடைமுடி இறைவா ஜய! ஜய!!
ஈசன் தந்தருள் மகனே ஜய! ஜய!!
உன்னிய கருமம் முடிப்பாய் ஜய! ஜய!!
ஊர்நவ சந்தி உகந்தாய் ஜய! ஜய!!
எம் பெருமானே இறைவா ஜய! ஜய!!
ஏழுல கும்தொழ நின்றாய் ஜய! ஜய!!
ஐயா கணபதி நம்பியே ஜய! ஜய!!
ஒற்றை மார்புடை வித்தகா ஜய! ஜய!!
ஓங்கிய ஆனைக் கன்றே ஜய! ஜய!!
ஔவியம் இல்லா அருளே ஜய! ஜய!!

புத்தகத் துள் உறை மாதே
பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுலகும் தொழு தேவி
சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
நங்காய் நங்காய் நமோஸ்து!
ஞானக் கொழுந்தே நமோஸ்து!
கல்விக்கரசே நமோஸ்து!
கணக்கறி தேவி நமோஸ்து!
சொல்லும் பொருளே நமோஸ்து!
சூக்கும ரூபி நமோஸ்து!!

## முருகன்—திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணந்துகொள வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதிஅரு ணசலம் அமர்ந்தபெரு மானே.

## வாழ்த்துப் பாட்டு

வாழ்க மறை, வாழ்க புவி,
வாழிய தமிழ்த்தாய்
வாழிய பாரத தேவி!

உ

கடவுள் துணை.

## ஔவையார் அருளிச் செய்த

# ஆத்திசூடி

## காப்பு

ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவ தொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டொன்று சொல்லேல்
ஙப்போல் வளை
சனி நீராடு
ஞயம்பட வுரை
இடம்பட வீடிடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தை தாய்ப் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மண்பறித் துண்ணேல்
இயல்பலா தன செயேல்
அரவம் ஆட்டேல்
இலவம் பஞ்சிற் றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலா தன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப்பட வாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்

செய்வன திருந்தச் செய்
சேரிட மறிந்துசேர்
சையெனத் திரியேல்
சொற்சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக் கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வம் இகழேல்
தேசத்தோ டொத்துவாழ்
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்
நிலையிற் பிரியேல்
நீர்விளை யாடேல்
நுண்மை நுகரேல்
நூற் பலகல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவினை நணுகேல்
நொய்ய வுரையேல்
நோய்க்கிடங் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெறநில்
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
பூமி திருத்தியுண்
பெரியாரைத் துணைக்கொள்
பேதைமை யகற்று
பையலோ டிணங்கேல்
பொருள்தனைப்போற்றிவாழ்
போர்த்தொழில் புரியேல்
மனந் தடுமாறேல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனை முகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லினல்லாள் தோள்சேர்
மேன்மக்கள் சொற்கேள்
மைவிழியார் மனையகல்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீரியம் பேசேல்
உத்தமனா யிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினை செயேல்
வைகறைத் துயிலெழு
ஒன்னாரைத் தேரேல்
ஓரஞ் சொல்லேல்

ஆத்திசூடி முற்றிற்று

# கொன்றைவேந்தன்

---

காப்பு

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிற் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி யோரகத் திரு
ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
காவல்தானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழவுரை
குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு
கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு

சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினுஞ் சாமத் துறங்கு
சையொத் திருந்தா லையமிட்டுண்
சொக்க ரென்பவர் ரத்தம் பெறுவர்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தைசொன் மிக்க மந்திர மில்லை
தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போரா முடியும்
துடியாப் பெண்டிர் மடியினெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையி னுழுதா ணினிது
தோழ னோடு மேழைமை பேசேல்
நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவ ரெனினு நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்யவராவர்
நோன்பென் பதுவே கொன்று தின்னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
பாலோ டாயினுங் கால மறிந்துண்

பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணிற் பாரந் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்
மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மைவிழியார் தம் மனையகன் றொழுகு
மொழிவது மறக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு
வளவ னாயினு மளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்தி லோர்க்கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரர்க் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை யிரவா திருத்தல்
ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னாந்துணை யில்லை
வையந் தோறுந் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதா தார்க் கில்லை யுணர்வொடு வொழுக்கம்

கொன்றைவேந்தன் முற்றிற்று

# உலக நீதி

## காப்பு

உலகநீதிப் புராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகன் காப்பு.

ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை யொருநாளு மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்
போகாத விடந்தனிலே போகவேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்
வாகாரும் குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (1)

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழகவேண்டாம்
நல்லிணக்க மல்லாரோ டிணங்கவேண்டாம்
அஞ்சாமற் றனிவழியே போகவேண்டாம்
அடுத்தவரை யொருநாளும் கெடுக்கவேண்டாம்
மஞ்சாருங் குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (2)

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்கவேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேடவேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்
வனந்தேடுங் குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (3)

குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்
கற்றவரை யொருநாளும் பழிக்கவேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்

கொற்றவனோ டெதிர்மாறு பேசவேண்டாம்
கோயிலில்லா வூரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிக ரொல்லாத வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. (4)

வாழாமற் பெண்ணைவைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றும் சொல்லவேண்டாம்
வீழாத படுகுழியில் வீழவேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீளவேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
வாழ்வாருங் குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. (5)

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண் [டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்கவேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்கவேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோ டிணங்கவேண்டாம்
சேர்த்தபுக ழாளனொரு வள்ளிபங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே. (6)

கருதாமற் கருமங்கள் முடிக்கவேண்டாம்
கணக்கழிவை யொருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்
பொதுநிலத்தி லொருநாளு மிருக்கவேண்டாம்
இருதார மொருநாளுந் தேடவேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழைபங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே. (7)

சேராத விடந்தனிலே சேரவேண்டாம்
செய்ந்நன்றி யொருநாளு மறக்கவேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரை யுதாசினங்கள் சொல்லவேண்டாம்

பேரான காரியத்தைத் தவிர்க்கவேண்டாம்
பிணைபட்டுத் துணைபோய்நீ திரியவேண்டாம்
வாதாடுங் குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (8)

மண்ணினின்றும் மண்ணோரஞ் சொல்லவேண்டாம்
மனஞ்சலித்துத் திடுக்கிட்டுத் திரியவேண்டாம்
கண்ணழிவு செய்துதுயர் காட்டவேண்டாம்
காணாத வார்த்தைகளைக் கட்டுரைக்கவேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்லவேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்கவேண்டாம்
மண்ணளந்தார் மருமகனார் மைந்தனெங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (9)

மறம்பேசித் திரிவாரோ டிணங்கவேண்டாம்
வாதாடி வழக்குரைத்துச் செல்லவேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்
தெய்வத்தை யொருநாளு மறக்கவேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்ட வற்றுரை நத்தவேண்டாம்
குறந்தனிலே வாழ்கின்ற வள்ளிபங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே. (10)

ஆதரித்துப் பலவகையாய்ப் பொருளுந் தேடி
யருந்தமிழா லறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோருங் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறுங் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்து பொருளுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வார் தாமே. (11)

உலகநீதி முற்றிற்று

Printed at
Sri Mahabharatham Press, Kumbakoram.
5,000 Copies : 10—5—49